1984 மார்ச் 26]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறக்கட்டளைகளில் தவறுகள் நடைபெறுமேயானால், அவற்றைச் சுட்டிக்காட்டினால், அந்தத் துறை அதன்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கும். அற நிலையத்துறையின் மூலம் ரூ. 58.40 இலட்சம் நன்கொடைகள் வழங்கப்பட்டன. இது குறித்து ஒரு வழக்கு உயர்நீதிமன்றத்தில் இன்னும் முடிவு ஆகாத நிலையில் இருப்பதால், அந்தத் தொகை யூ.கோ. பாங்கில் வைப்பு நிதியில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஊர்களில் கட்டிடங்கள் இல்லாத காரணத்தினால், கோயில்களை சத்துணவு மையங்களாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசிற்குத் தெரியுமா? எனவே கோயில்களுக்குச் செல்லக் கூடிய பக்தர்கள் சங்கடப்படுகிறார்களே, அதை மாற்றி சத்துணவு மையங்களைத் தனியாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஆலயங்கள் கட்டப்படுவது மக்களுடைய தேவைக்காகத்தான். தேவைப்படுகின்ற போது, ஆபத்துக் காலங்களில் அவைகளை உபயோகிப்பதில் தவறில்லை. அதுவும் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பார்கள். ஆகவே தெய்வம் உலவுகின்ற இடத்தில் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதிலே தவறில்லை.

நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் திட்டம்.

465—(* வினா எண். 19147)—திரு. மு. அப்பாதுரை : திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் திட்டத்தில் விதவைகளுக்கு முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் திட்டம் அரசு மருத்துவ மனைகளில் செயல்படுத்தப்படுவதில்லை, ஆகவே விதவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு இடமில்லை.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு மருததுவமனைகளில் நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுவதில்லை என்றும் விதவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு இடமில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். ஆனால் இன்றைக்கு தனியார்கள், வெளிச் சந்தைகளில் அரசு

[1984 மார்ச் 26

மருத்துவ மனைகளில் எக்கச்சக்கமாக கடைகளை வைத்துக் கொண்டு விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதைத் தடுத்து, இப்படிப்பட்ட விதவைகளுக்கு முன்னுரிமை அளித்து, இட்லி, தோசை போன்றவைகளை விற்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த, இனிமேலாவது நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் த்லைவர் அவர்களே, சுகாதாரத் துறையின் மூலமாக அந்த இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சிற்றுண்டிசாலைகள், மற்றும் பெட்டிக் கடைகள் உள்ளன. இப்படி இட்டிலி தோசைக் கடைகள் வைப்பதால், கொசு ஈ, போன்ற பூச்சிகளின் தொல்லைகள் மிகுதியாக இருக்கும் என்றும், அதனால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது, வியாதிகள் பெருக வாய்ப்பு இருக்கின்றது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் போலவே இந்த இட்லி தோசைகளைச் சாப்பிடக் கூடாது என்று ஒரு கட்டுப்பாட்டை இந்த வியாதியின் காரணமாகக் கூடி மருத்துவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட மனத்தூண்டுதல்களின் காரணமாக, சாப்பிட்டால் நல்லது என்று கூட அந்த வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள் நினைக்கலாம். அந்த அடிப்படையின் காரணமாக, மனத்தூண்டுதல் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையிலேதான், மருத்துவ மனைகளில் இப்படிப்பட்ட இட்லி, தோசைக் கடைகள் வைக்கக் கூடாது என்று இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வியாதிக்கும் இட்லி, தோசை சாப்பிட வேண்டாம் என்று மருத்துவர்கள் சொல்லவில்லை. ஆனால் இன்றைக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய இந்தப் பெட்டிக் கடைகளுக்கு, அதிலே முன்னுரிமைகள் கொடுத்து, அந்த விதவைப் பெண்களுக்கு, இந்த மாதிரி லைசென்ஸ் கொடுத்து, அந்த அடிப்படையில் தொழில் செய்வதற்கு இனிமேலாவது முன் முயற்சி எடுப்பீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகள், இட்லி, தோசைக் கடைகளை அரசு அலுவலகங்கள், கல்லூரிகள் போன்ற இடங்களிலே வைத்துக் கொள்ளலாம் என்று அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே கூட அவர்கள் தங்களுக்கு வேண்டிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மருத்துவமனைகளைத் தேர்ந்தெடுத்து, வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவர்களால் ஒரு சுகாதாரக் கேடு விளைவிக்கின்ற அளவிற்கு இருக்கக் கூடாது என்று அரசு இதை ஏற்படுத்தக் கூடாது என்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1984 மார்ச் 26]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட்லி தோசை விற்பதின் மூலமாக மனத்தூண்டுதல் ஏற்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசு தலைமை மருத்துவமனை போன்ற இடங்களில், இதைவிட நோயாளிகளுக்குக் கெடுதலை உண்டாக்கக்கூடிய அளவிற்கு கேன்டீன்கள் நடத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளில் கேன்டீன்கள் நடத்தப்படுகின்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட சுகாதாரக் கேடுகளை விளைவிக்கின்ற கேன்டீன்களை நடத்தினால் நிச்சியமாக அவர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள்.

ஆதரவற்ற விதவைகளின் குழந்தைகட்கு உதவியளிக்கும் திட்டம்

466. (*வினா எண் 20521)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதரவற்ற விதவைகளின் பள்ளிப்படிப்புப் பருவத்தில் இருக்கும் குழந்தைகட்குப் பாதுகாப்புக்கும் படிப்புக்கும் ஊர்ஜிதம் செய்யும் வகையில் உதவியளிக்க, அரசிடம் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) ஆதரவற்ற விதவைகளின் பள்ளிப் படிப்பு பருவத்திலிருக்கும் குழந்தைகளுக்கு பாதுகாப்பிற்கும் படிப்பிற்கும் ஊர்ஜிதம் செய்யும் வகையில் உதவியளிக்க அரசிடம் திட்டம் ஒன்றும் பரிசீலனையில் இல்லை. ஆனால் விதவைகளின் பள்ளிப்படிப்பு பருவத்திலிருக்கும் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் படிப்பிற்காக ஒரு திட்டம் ஏற்கெனவே நடைமுறையிலுள்ளது.

2. அரசு ஆணை எண் 1242, சமூகநலம், நாள் 17–7–79-இன்படி தனியாரால் நடத்தப்படும் தொண்டு நிறுவனங்களுக்கு 50 விதவைகளின் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் பாதுகாப்பிற்காக மாதத்திற்கு ரூபாய் 36 அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இத்திட்டத்தை மறு பரிசீலனை செய்து மேலே கூறப்பட்ட 50 குழந்தைகளை அரசால் நடத்தப்பெறும் சேவை இல்லங்களில் சேர்த்து அவர்களுக்கு மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு ரூபாய் 36 வீதம் அளிக்க அரசு ஆணை நிலை எண் 888, சமூகநலத்துறை, நாள் 24—11—1981-ல் ஆணை வழங்கப்பட்டு, அதன்படி விதவைகளின் 50 குழந்தைகள் சேவை இல்லத்தில